1990 மே 12]

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாஸ்டர் பிளான் திட்டம் 1974 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு மே திங்களில், இந்தத் திட்டத்தில் கூடுதலாக சில பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் இதற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுவதற்கு முன்பாக பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டு மேலும் சில பகுதிகள் அந்தப் பகுதியிலே சேர்க்கப்பட்டுள்ளன. அதற்கான ஆய்வு தற்போது நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தின்படி, அரசின் மூலம் அதைச் சேர்க்க இயலுமா என்பதை பரிசீலனை செய்யலாம்.

கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் நிவாரணம்

* 4045—திரு. இரெ. இராசமாணிக்கம் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கடனை தீர்க்க முடியாமல் உள்ள கைத்தறி நெசவாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் வழங்கப்பட்டதை போல் கைத்தறி நெசவாளர்களுக்கும் கடன் நிவாரணம் வழங்கப் படுமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) யாரும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

10-00 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலோடு வினா நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைக் கைத்தறி நெசவாளர்களுக்கு எந்தெந்த காரியங்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடன் வழங்கப்படுகிறது? ஏழைக் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக கடன் வழங்கப்பட்டுள்ளதா? ஆமெனில், எவ்வளவு தொகை நிலுவையாக உள்ளது என்பதைத் தங்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள நெசவாளர்களுக்கு அந்தக் கடனைப் பொறுத்த அளவில் மூலப் பொருளான நூலும், பாவும், ஊடு நூலும் வழங்கப்பட்டு, அந்தத் துணி உற்பத்தி செய்யப்பட்டதற்குப் பின்னால் அது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வரவு வைக்கப்படுகின்றது. அப்படி வரவு வைக்கின்ற நேரத்தில் அவர்கள் கூடுதலாகப் பெற்ற தொகையைக் கழித்துக் கொள்வதால் கடனுக்கு எந்தவித வாய்ப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள நெசவாளர் களுக்கு தறியை நவீனப்படுத்துவதற்கு ரூ. 200, மற்றும் ரூ. 400 மானியமாக அவர்களுக்கு கடனாக வழங்கப்படுகிறது. மேலும் வீட்டு வசதியைப் பொறுத்த அளவில் நெசவாளர் சங்கத்தி லுள்ள நெசவாளர்களுக்கு ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 15,000 வழங்கப்படுகிறது. அந்த ரூ. 15,000-ல் ரூ. 5,000 மானியமாக வும், ரூ. 10,000 நீண்ட காலக் கடனாகவும் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தில் கடன் பெற்றவர்கள் எவ்வளவு பேர் என் கின்ற குறிப்பு தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்றபோது, ரூ. 5,000 மானியமாகவும், ரூ. 10,000 கடனாகவும் வழங்குவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரி வித்திருக்கிறார்கள். ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு இனாமாக வீடு கட்டிக் கொடுப்பதைப்போல் கைத்தறி நெசவாளர் களுக்கும் இனாமாக ஒரு குறிப்பிட்ட அளவில் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாகத்தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலே உள்ள நெசவாளர்களைப் பொறுத்த அளவில் இந்த நடப் பாண்டில் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2,000 வீடுகள் கட்டுவதாக அறிவித்திருக் கிறார்கள். முன்பெல்லாம் ஓடு போட்ட வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இந்த ஆண்டு முதல் அந்த நெசவாளர் களுக்கு கான்கிரீட் வீடுகள், கூடுதலாக இரண்டு தறியை உள்ளடக்கிக் கொள்ளக் கூடிய வசதியான வீடுகள் இன்றைய தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இலவசமாக வீடுகள் வழங்கப்படுகின்ற குறிப்பு தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.